# ஏழுமலைக்கு பதவி உயர்வா? அச்சச்சோ....அச்சச்சோ....

# கவனிக்குமா அரசு?

## அதிரடி காண்பாரா உள்துறை செயலர்?

சென்னை குன்றத்தூர் பகுதியின் RTO அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளாராக இருப்பவர் ஏழுமலை. இவர் மீது விஜிலென்ஸ் போலிசாரின் வழக்குகளும், மற்றும் துறைரீதியான சில நடவடிக்கைகளும் உள்ளது. அதனை எல்லாம் மறைத்து RTO -வான பதவி உயர்வுக்கு, இவரது கோப்புகள் நகர்த்தப்பட போக்குவரத்து தலைமை அலுவலகமான எழிலகத்தில் உள்ள ஊழல்களின் "ராஜாவான " நிர்வாக இணை ஆணையர் (JTC) "வெங்கட்" கடும் பிரயாசித்தம் செய்து வருகிறாராம்.



வெங்கட்-JTC



ஏழுமலை



போக்குவரத்து ஆணையர் நிர்மல்ராஜ் IAS

ஏற்கனவே ,இதற்கு முன்பு இருந்த உள்துறை செயலர் அதிரடி அதிகாரியான பிரபாகர் IAS-யிடம், மற்றொரு IAS ஆன ஒருவர் ஏழுமலைக்காக சிபாரிசுக்காக பேசிய போது, இதோடு நீங்கள் 21-வது நபர். நேர்மையில்லா அதிகாரிக்கு ஏன் இத்தனை சிபாரிசு என பேசி போனை கடுப்புடன் துண்டித்தார் அந்த அதிரடியான செயலர் என்ற செய்திகளும் உள்துறையில் இருந்து சம்பகாலமாக வலம் வந்தும் குறிப்பிடதக்கது.

அதே நேரத்தில் ஏழுமலையின் கோப்புகளும் முடக்கப்பட்டது. ஆனாலும், தற்போது புதிய உள்துறை செயலரது கண்களை மறைத்து, ஏழுமலையின் பதவி உயர்விற்கான கோப்புகளை நகர்த்த சில ஊழல் அதிகாரிகளால் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருந்தாலும் புதிய உள்துறை செயலாளரான நேர்மையான அதிகாரியான பணிந்திர ரெட்டி IAS அவர்கள் "பத்தரை மாத்து தங்கம்" என்பதால், இந்த ஊழல் அதிகாரிகளின் ஏழரைகள் எல்லாம், இந்த ஐ.ஏ.எஸ்ஸிடமும் எடுபடாது என திட்டவட்டமாக போக்குவரத்து துறை வட்டாரங்களில் இருந்தும் செய்திகளும் கசிகிறது.

9994478389 nellaigopal08@gmail.com

அதே நேரத்தில் பெருகி வரும் விபத்துக்களையும், கொத்து கொத்தாய் சாலையில் மடியும் அப்பாவிகளின் உயிர்பலிகளை எண்ணி, ஏழுமலை போன்ற அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகளை அளித்து, இந்த ஊழல் அதிகாரிகளின் அதிகாரங்களை அதிகப்படுத்துகிறபோது மேலும், மேலும் விபத்துக்கள் பெருகும் என்பதால், ஏழுமலையின் கோப்புகளை அரசு செயலர்கள் நன்கு உற்று நோக்கி, இவரது பதவி உயர்வுக்கான கோப்புகளை கடும் தண்டனைக்குள்ளாக்கி முடக்கப்பட வேண்டும் என்பதே போக்குவரத்து துறையில் உள்ள பல்வேறு அதிகாரிகளின் கோரிக்கைகளாக இருப்பதோடு, நமது கோரிக்கையும் அதுவே என பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே அரசு செயலர்கள் எழுமலையின் கோப்பின் மீது உற்று நடவடிக்கை எடுத்தால் சரி

---

**நெல்லை கோபால்.**
**மூத்த பத்திரிகையாளர்**
**06-07-2022/9994478389.**